செய்தி வெளியீடு எண்: 506 நாள் : 14.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.10.2015 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு வீரர்களுக்கான தங்கும் விடுதி, சமையற் கூடம் மற்றும் உணவருந்தும் கூடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 22 கோடியே 77 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செயற்கை இழை ஓடுதள பாதை, செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம், நீச்சல் குளம், சிறு விளையாட்டரங்கம், மகளிர் விளையாட்டு விடுதி, பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், மேற்கூரையுடன் கூடிய கையுந்துபந்து மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட, அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும், மாநில அளவிலும் பங்குகொள்ள செய்தல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல், மாணவர்கள் தங்கி விளையாட்டில் பயிற்சி பெற, விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகின்றது.

அந்த வகையில், சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 600 விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு ஏதுவாக கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி, சமையற் கூடம் மற்றும் உணவருந்தும் கூடம்

ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை செனாய் நகர் நீச்சல்குள வளாகத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குறுந்தூர நீச்சல் குளம்; மதுரை – டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விசை நீர் தெளிப்பான்கள், நீர்வடிகலன் மற்றும் ஒளிரும் உயர்மின் விளக்கு வசதிகளுடன் கூடிய செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம்; திருச்சிராப்பள்ளி – அண்ணா விளையாட்டரங்கத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒளிரும் மின்விளக்கு வசதிகளுடன் கூடிய எட்டு வரிசைகள் கொண்ட செயற்கை இழை ஓடுதள பாதை, 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கான தங்கும் விடுதி மற்றும் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒளிரும் மின்விளக்குகள் மற்றும் மேற்கூரையுடன் கூடிய கையுந்துபந்து மைதானம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம்– ஸ்ரீரங்கத்தில் 4 கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மரத்தாலான தரைதளம், விளையாட்டு வீரர்களுக்கான அறை, கழிவறை வசதி, மின்விளக்கு வசதி, இருக்கை வசதி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்;

திருநெல்வேலி – அண்ணா விளையாட்டரங்கத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒளிரும் மின்விளக்குகள் மற்றும் மேற்கூரையுடன் கூடிய கையுந்துபந்து மைதானம்; நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளம், 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விளையாட்டு விடுதி மற்றும் திருச்செங்கோட்டில் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 400 மீட்டர் தடகள ஓடுதளம், கால்பந்து ஆடுகளம், கையுந்து பந்து ஆடுகளம், கபடி ஆடுகளங்கள் உள்ளிட்டவைகளுடன் அமைக்கப்பட்டுள்ள சிறு விளையாட்டரங்கம்; பெரம்பலூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விளையாட்டு விடுதி; தேனி மாவட்ட விளையாட்டரங்கத்தில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளம்;

என மொத்தம் 27 கோடியே 27 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி த. சபிதா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 14 .10.2015